**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.Sc. No. 246/2017**

**Deposition of P.W.2 –** ஜெயக்குமார்

**Dated:** 04.12.2024

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் விசாரணை சாட்சியம் அளிக்க என்னை மாவட்ட சிறையிலிருந்து அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். எனக்கும், போலீசார் ஒருவருக்கும் ஏற்பட்ட வழக்கில் சிறையில் இருந்தேன். என் மீது கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் போக்கிரி பட்டியல் உள்ளதா என்றால் இருந்தது பொய்யாக அவ்வாறு சேர்த்து விட்டார்கள். என் மீது கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் வழக்குகள் இருந்தது. என் மீது குழித்துறை நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கு இருந்தது என்றால் சரிதான். அந்த வழக்கில் என் மீது பிடியாணை உள்ளது என்றால் சரியல்ல. தற்போது நான் பி.ஜே.பி.அரசியல் கட்சியில் இருக்கிறேன். வழக்கு தாக்கல் செய்யும் போது நான் தி.மு.க கட்சியில் இருந்தேன். இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னை விசாரித்த போது போலீசார் அதை எழுதி கொண்டார்கள். போலீசார் விசாரணையில் நான் கையொப்பம் போட்டேன். போலீசார் விசாரிக்கும் போது நீதிமன்றத்தில் சொன்னதை தான் சொன்னேன். இவ்வழக்கின் சார்பு ஆய்வாளர் என் வீட்டில் வாடைக்கு இருந்தார் என்றால் என் அண்ணன் வீட்டில் வாடகைக்கு இருந்தார். வழக்கின் உதவி ஆய்வாளருக்கும் தொடர்பு இருந்ததாக தகவல் வெளியிடப்பட்டிருந்தது என்றால் அது பொய்யாக பரப்பப்பட்டிருந்தது. தற்போது பெண் மருத்துவர் மீது பாலியல்தொல்லை கொடுத்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது பொய் வழக்கு ஆகும். 2வது எதிரியிடம் கடன் பெற்றுள்ளேனா

என்றால் இல்லை. நானும், உதவி ஆய்வாளரும் சேர்ந்து பொய் வழக்கை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நாகர்கோவில் காவல்நிலையத்தில் ரூ.35,00,000/- ஏமாற்றியதாக என் மீது வழக்கு இருந்தது. அந்த வழக்கில் என்னை கைது செய்தார்கள். குண்டாஸ் சட்டத்தில் என்னை அழைத்தார்கள். பெண் மருத்துவரிடம் நான் தவறாக நடந்ததாக வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் அது பொய்யாக பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும். பொய் வழக்கு என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. ஆனால் ஆவணம் என்னிடம் உள்ளது. தக்கலை காவல்நிலையத்தில் என் மீது பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. தக்கலை காவல்நிலையத்தில் 4 வழக்குள் இருந்தது. வடசேரி காவல்நிலையத்தில் குற்ற எண்.1137 என ஒரு வழக்கு இருந்தது. கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் என் மீது வழக்குகள் இருந்தது. நான் எந்த வழக்கிலும் நிராபராதி என விடுதலை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தற்போது நாகர்கோவிலில் வசித்து வருகிறேன். வழக்கு பதிவு செய்யும் போது முட்டைக்காட்டில் வசித்து வந்தேன். முட்டைக்காட்டில் என்க்கு 2 வீடுகள் உள்ளன. எனது ஒரு வீட்டில் கொற்றிக்கோடு சார்பு ஆய்வாளர் வாடகைக்கு இருந்தார் என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் 09.08.2011ம் தேதி பணியிட மாற்றம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். விசாரணையில் எனக்கும், சார்பு ஆய்வாளருக்கும் உள்ள தொடர்பு தெரிய வந்ததால் பணியிடமாற்றம் செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. எனது வீட்டிலிருந்து மெயின் ரோட்டிற்கு வருவதற்கு 150 அடி தூரம் இருக்கும். முட்டைக்காட்டிலிருந்து வடக்கு நோக்கி 1 கி.மீ தூரம் கடந்து

மேக்காமண்டபம் சாலை உள்ளது என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கும், பி.என்.எஸ் டீக்கடைக்கும் இடையே 5 டீக்கடைகள் உள்ளது என்றால் 10 டீக்கடைகள் உள்ளது. பி.என்.எஸ். டீக்கடை என்பது வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட இடம் என்றால் சரியல்ல. மேக்காமண்டபம் சாலையில் தார்ரோட்டை கடந்து மண்சாலை உள்ளது. இருசக்கர வாகனத்தில் தான் வந்தேன். இருசக்கர வாகனத்தை கடையின் அருகே நிறுத்தியிருந்தேன். எனது இருசக்கர வாகனத்தை போலீசார் எடுத்து செல்லவில்லை. கடைக்கு முன்னால் இருந்து என்னை கடத்தி சென்றார்கள். தார் ரோட்டில் வைத்து கடத்தவில்லை. மீட்ட பிறகு நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. உண்மையில் என்னை அடித்திருந்தால் நான் மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றால் சரியல்ல. மிரட்டி பணம் பறிக்க வேண்டி பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னை அடித்து இழுத்து சென்றதாக போலீசாரிடம் சொன்னேன். சம்பவ இடத்தில் வீடுகள் உள்ளது என்றால் கிடையாது. வழக்கிற்காக எனது லுங்கியை உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. சா.பொ.1–ற்கும், எதிரிகளுக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. 2வது எதிரியிடமிருந்து பணம் பறிப்பதற்காக பொய் வழக்கு போட்டோம் என்றால் சரியல்ல. 2வது எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. அழகியமண்டபத்தில் 2வது எதிரிக்கு பெயிண்ட் கடை கிடையாது என்றால் சரியல்ல. அழகியமண்டபம் எப்போதும் ஆட்கள் வரக்கூடிய பெரிய சந்திப்பு என்றால் சரிதான். எதிரிகள் என்னை கடத்தவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை 31.07.2011 ம்தேதி காலை 10.30 மணிக்கு கைது செய்தார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும்

நடக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

7**வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் நீதிமன்றத்தில் சொன்னது போல் தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். எனக்கு எதிராக நடந்த குற்ற செயல் சம்மந்தமாக முதல் விசாரணையில் சொன்னது போல் போலீசாரிடமும் சொன்னது என்றால் சரியல்ல.